## படிப்பறிவுத் திறன் தேர்வு - திருப்புதல் தேர்வு - 1 (அலகுத் தேர்வு 1 முதல் 11 வரை)


## கணிதம்

91. ‘a’ மற்றும் ‘b’ ஆகியன இரு முழுக்கள் எனில், கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக.

i) $a \times b = b \times a$ - a) சேர்ப்புப் பண்பு
ii) $a + (b + c) = (a + b) + c$ - b) சமனிப் பண்பு
iii) $a \times (b + c) = (a \times b) + (a \times c)$ - c) பரிமாற்றுப் பண்பு
iv) $a \times 1 = 1 \times a = a$ - d) பங்கீட்டுப் பண்பு

(1) i-d ii-a iii-c iv-b (2) i-b ii-a iii-d iv-c (3) i-c ii-a iii-d iv-b (4) i-c ii-d iii-a iv-b

92. கொடுக்கப்பட்டுள்ள இணைகரத்தின் சுற்றளவு 54 செ.மீ எனில், x-இன் மதிப்பைக் காண்க.




(1) 24 cm (2) 63 cm
(3) 18 cm (4) 14 cm


93. தவறான கூற்றைக் கண்டறி.

(1) சதுரத்தின் மூலைவிட்டங்கள் சமநீளமுடையவை.
(2) செவ்வகத்தின் மூலைவிட்டங்கள் சமநீளமுடையவை.
(3) இணைகரத்தின் மூலைவிட்டங்கள் சமநீளமுடையவை.
(4) சாய்சதுரத்தின் மூலைவிட்டங்கள் சமநீளமுடையவை அல்ல

94. ஒரு சாய்சதுரத்தின் பரப்பு 100 ச.செ.மீ எனில், அதன் மூலைவிட்டங்களின் பெருக்கற்பலன் ___

(1) 200 (2) 50 (3) 25 (4) 40

95. படத்தில் உள்ள செவ்வகத்தின் நீளம் மற்றும் அகலம் முறையே 10 மீ, 6 மீ எனில், நிழலிட்ட பகுதியின் பரப்பளவு என்ன?



(1) 30 ச.மீ (2) 60 ச.மீ
(3) 45 ச.மீ (4) கூற இயலாது

96. $-3, 6, -12, 24, -48$ அடுத்த எண் யாது?

(1) 54 (2) $-64$ (3) 96 (4) $-72$

97. $y = -5$ எனில், $y^2 - 4(y - 3)$ இன் மதிப்பு யாது?

(1) 85 (2) 7 (3) $-7$ (4) 57

98. மதிப்பு காண்க. $\frac{0.001}{0.0001} + \frac{0.1011}{0.001}$

(1) 11.11 (2) 111.1 (3) 1.111 (4) 10.111

99. $7129 \times 18 = 128322$ எனில், கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

(1) $71.29 \times 0.18 = 12.8322$ (2) $712.9 \times 1.80 = 1283.22$
(3) $0.7129 \times 1.8 = 1.28322$ (4) $712.90 \times 18 = 1283.22$

100. $\left(\frac{x}{y}\right)^{n-1} = \left(\frac{y}{x}\right)^{n-3}$ எனில், n இன் மதிப்பு என்ன?

(1) $\frac{1}{2}$ (2) 1 (3) $\frac{7}{2}$ (4) 2

101. $\sqrt{5 + \sqrt{16}} = ?$

(1) 3 (2) 4 (3) 5 (4) 6

102. ஓர் எண்ணையும் அதன் தலைகீழியையும் கூட்டும்போது கிடைப்பது $4\frac{1}{4}$ எனில், அவ்வெண் யாது?

(1) 3 (2) $\frac{1}{4}$ (3) $\frac{1}{8}$ (4) எதுவும் இல்லை

103. $b = \frac{2a+1}{2a-1}$ எனில், a இன் எம்மதிப்பிற்கு b ஆனது விகிதமுறு எண் இல்லை?

(1) 2 (2) 3 (3) $\frac{1}{3}$ (4) $\frac{1}{2}$

104. ′x′ மற்றும் ‘y’ -க்கு இடைப்பட்ட விகிதமுறு எண் எது?

(1) $\frac{x-y}{2}$ (2) $\frac{x+y}{2}$ (3) $\frac{x \times y}{2}$ (4) $\frac{x \div y}{2}$

105. ஒரு முக்கோணத்தின் அடிப்பக்கம் $14x^3y^2$ cm அதன் உயரம் $8x^2y$ cm எனில் பரப்பளவு _____

(1) $56x^5y^3$ cm (2) $112x^5y^3$ $cm^2$ (3) $56x^5y^3$ $cm^2$ (4) $56x^5y^2$ $cm^2$

106. கீழ்க்கண்டவற்றுள் எது பல்லுறுப்புக் கோவை அன்று?

(1) $\frac{2}{x^{-2}}+\frac{5}{x^{-1}}+3$  (2) $\sqrt{3}x^2+5x+\sqrt{5}$  (3) $7x^2+5\sqrt{3}x-2$  (4) $7x^2+\sqrt{2x}+5$

107. ஒரு வட்டத்தின் சுற்றளவு $10\pi$ செ.மீ எனில், அதன் மிகப்பெரிய நாணின் நீளம் என்ன?

(1) 10 செ.மீ  (2) 5 செ.மீ  (3) 7 செ.மீ  (4) 4 செ.மீ

108. ஒரு தளம் 10 மீ நீளம் 8 மீ அகலம் உடையது. அதன் மீது 6 மீ நீளமும் 5 மீ அகலமும் உள்ள விரிப்பு விரிக்கப்பட்டுள்ளது. எனில் விரிப்பால் மூடப்பட்ட பகுதியின் பரப்பளவு என்ன?

(1) 80 ச.மீ  (2) 30 ச.மீ  (3) 50 ச.மீ  (4) 40 ச.மீ

109. $2^n+2^n=2^6$ எனில், 'n' இன் மதிப்பு யாது?

(1) 3  (2) 4  (3) 5  (4) 6

110. $(p+q)(q-p)=?$

(1) $(p-q)^2$  (2) $p^2-q^2$  (3) $(p+q)^2$  (4) $q^2-p^2$

## அறிவியல்

111. ஒரு வானியல் அலகு ________.

(1) 149.6 மில்லியன் கிலோமீட்டர்  (2) 14960000 கிலோமீட்டர்

(3) 1 மற்றும் 2  (4) 2 மட்டும்

112. இரும்பினால் செய்யப்பட்ட ஒரு பெட்டியின் பருமன்125 செமீ$^3$, அதன் அடர்த்தி 7.8 கி/செமீ$^3$ எனில் பெட்டியின் நிறை ________.

(1) 15 கி.கி  (2) 15 கி  (3) 975 கிகி  (4) 975 கி


113. Q = ________.


(1) I × T  (2) I / T  (3) T / I  (4) Q × T


114. ஓய்வு நிலையிலுள்ள பேருந்து 10 விநாடியில் 100 மீ / வி என்ற வேகத்தை அடைகிறது எனில் அதன் முடுக்கம் யாது?


(1) 1000 மீ / வி$^2$  (2) 0.1 மீ / வி$^2$  (3) 10 மீ / வி$^2$  (4) 0.01 மீ / வி$^2$

115. பின்வருவனவற்றுள் எப்படம் சீரற்ற எதிர்முடுக்கத்தைக் குறிக்கிறது?

(1)



(2)



(3)



(4)



116. CGS முறையில் பாகியல் விசையின் அலகு ________.

(1) பாய்ஸ்  (2) $Nsm^{-2}$  (3) $kgm^{-1}s^{-1}$  (4) அனைத்தும்

117. ஒற்றைக் காலில் நிற்கும் கொக்கு ஒன்றின் எடை 40N மற்றும் அதன் பாதத்தின் பரப்பு 0.01 $m^2$ எனில் அது தரையின்மீது செலுத்தும் அழுத்தத்தைக் கணக்கிடுக.

(1) 20 N / $m^2$  (2) 200 N / $m^2$  (3) 2000 N / $m^2$  (4) 200 N / $m^2$

118. சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு.

a. கெல்வின் அளவீட்டு முறை, வெப்பநிலையை அளக்கப் பயன்படுத்தப்படும் SI அலகு முறை ஆகும்
b. பாரன்ஹீட் வெப்பநிலைமானியின் அளவுகோலானது 32°F லிருந்து 212°F வரை அளவிடப்பட்டுள்ளது
c. மனித உடலின் சராசரி உடல் வெப்பநிலை 310.15 K ஆகும்
d. ரான்கீன் அளவீட்டு முறை ஒரு தனிச்சுழி அளவீட்டு முறையாகும்.

(1) a, c  (2) b, d  (3) a, d  (4) அனைத்தும்

119. ஓர் இடத்தின் வெப்பநிலை 273°C எனில் அதற்கு இணையான கெல்வின் மதிப்பு ________.

(1) 0° கெல்வின்  (2) 546° கெல்வின்  (3) 0 கெல்வின்  (4) 546 கெல்வின்

120. Inkscape மென்பொருளின் பயன் ________.

(1) காகிதத்தில் வரைந்த படங்களை வெக்டர் படங்களாக மாற்ற
(2) காகிதத்தில் வரைந்த படங்களை ராஸ்டர் படங்களாக மாற்ற
(3) 1 மற்றும் 2
(4) இவற்றில் ஏதுமில்லை

121. பொதுவாக ஒரு பொருளை வெப்பப்படுத்த அதன் பருமன் ________.
(1) அதிகரிக்கும் (2) குறையும் (3) குறைந்து அதிகரிக்கும் (4) மாறாது

122. ஒரு உலோகப்பந்தின் வெப்பநிலையை 30°C இருந்து 40°C ஆக உயர்த்த 3000 ஜூல் வெப்ப ஆற்றல் தரப்படுகிறது எனில், அதன் வெப்ப ஏற்புத்திறன் ________.
(1) 300 J / K (2) 300 J / S (3) 30 J / K (4) 30 J / S

123. பின்வருவனவற்றுள் செயற்கை ஒளிமூலங்கள் எவை எனத் தேர்வு செய்க.
(i) மெழுகுவர்த்தி, நியான் விளக்கு (ii) நியான் விளக்கு, சூரியன்
(iii) சோடியம் ஆவி விளக்கு, எரியும் அடுப்பு (iv) மின்மினிப்பூச்சி, சோடியம் ஆவி விளக்கு
(1) (i), (iii) (2) (i), (iii), (iv) (3) (i), (ii), (iv) (4) (ii), (iv)

124. வானவில் : ஒளிமூலத்திற்கு எதிர் திசையில் தோன்றும் :: நிழல் : ________. தோன்றும்.
(1) ஒளிமூலத்தின் திசையில் (2) ஒளிமூலத்திற்கு இடது திசையில்
(3) ஒளிமூலத்திற்கு எதிர் திசையில் (4) ஒளிமூலத்திற்கு வலது திசையில்

125. நீரின் ஒளிவிலகல் எண் 4/3 மற்றும் கண்ணாடியின் ஒளிவிலகல் எண் 3/2 எனில் நீரின் ஒளிவிலகல் எண்ணைப் பொருத்து கண்ணாடியின் ஒளிவிலகல் எண்ணைக் காண்க.
(1) 1 (2) 1.125 (3) 2 (4) 2.125

126. பொருத்துக.
(i) மென்மையான உலோகம் - a. பாதரசம்
(ii) திரவநிலை உலோகம் - b. புரோமின்
(iii) கார்பனின் புறவேற்றுமை வடிவம் - c. கிராஃபைட்
(iv) திரவநிலை அலோகம் - d. சோடியம்
(1) i - a ii - d iii - c iv - b (2) i - c ii - d iii - a iv - b
(3) i - c ii - a iii - d iv - b (4) i - d ii - a iii - c iv - b

127. கூற்று : அண்டத்தில் பெரும்பான்மையாகக் காணப்படும் அணு ஹைட்ரஜன் அணு ஆகும்.
காரணம் : பேரண்டத்தில் அணுக்களுள் ஏறக்குறைய 74% ஹைட்ரஜன் அணுக்கள் ஆகும்.
(1) கூற்றும் காரணமும் சரி (2) கூற்றும் காரணமும் தவறு
(3) கூற்றும் காரணமும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.
(4) கூற்றும் காரணமும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்கவில்லை.

128. பொருத்துக.
(i) பதங்கமாதல் - a. சோடியம் ஹைட்ராக்ஸைடு நீரில் கரைதல்
(ii) படிகமாக்கல் - b. குளுக்கோஸ் நீரில் கரைதல்
(iii) வெப்ப உமிழ்மாற்றம் - c. அமோனியம் குளோரைடை வெப்பப்படுத்துதல்
(iv) வெப்பக்கொள் மாற்றம் - d. சூடான செறிந்த கரைசல்
(1) i - a ii - d iii - c iv - b (2) i - c ii - d iii - a iv - b
(3) i - c ii - a iii - d iv - b (4) i - d ii - a iii - c iv - b

129. பின்வருவனவற்றுள் எது வலி நிவாரணி அல்ல?
(1) ஆஸ்பிரின் (2) கோடீன் (3) டைக்ளோஃபினாக் (4) சிமெடிடின்

130. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
(1) ஓசோன் (2) சோடியம் குளோரைடு (3) சல்ஃபர் டை ஆக்ஸைடு (4) மணல்

131. பளபளப்பான, மின்சாரத்தைக் கடத்தக்கூடிய அலோகம் ________.
(1) கந்தகம் (2) வைரம் (3) கிராஃபைட் (4) குளோரின்

132. தீக்குச்சியின் தலைப்பகுதியில் உள்ளது ________.
(1) பொட்டாசியம் குளோரேட் (2) ஆன்டிமனி டிரை சல்பைடு
(3) சிவப்பு பாஸ்பரஸ் (4) 1 மற்றும் 2

133. பித்தளைப் பாத்திரங்கள் காற்றினால் தனது பளபளப்புத் தன்மையை இழக்கக் காரணம் _____.
(1) காற்றிலுள்ள மாசுபாடு.
(2) காற்றில் நைட்ரஜன் அளவு அதிகமாக இருப்பது.
(3) பித்தளைப் பாத்திரங்களில் உள்ள தாமிரம் காற்றுடன் தொடர்பு கொண்டு தாமிர கார்பனேட்டை உருவாக்குதல்.
(4) பித்தளைப் பாத்திரங்களில் உள்ள வெள்ளி காற்றுடன் தொடர்பு கொண்டு கருமை நிற வெள்ளி சல்பைடை உருவாக்குதல்.

134. வெப்பநிலைமானிகளில் நைட்ரஜன் பயன்படுத்தப்படக் காரணம் ________________
(1) வெப்பநிலையை சரியாக அளவிட (2) பாதரசம் ஆவியாவதைத் தடுக்க
(3) பாதரசம் சீராக விரிவடையாமலிருக்க (4) பாதரசம் உருகுவதைத் தடுக்க

135. பின்வருவனவற்றுள் தவறான கூற்று எது?
(1) நைட்ரஜன் குளிர்சாதனப் பெட்டியில் குளிர்விப்பானாகப் பயன்படுகிறது.
(2) சுண்ணாம்பு நீரில் ஓரளவு கார்பன் டை ஆக்ஸைடை செலுத்த கால்சியம் கார்பனேட் உருவாகிறது.

(3) கரித்தூளுடன் கார்பன் டை ஆக்ஸைடை இணைத்து வெடிபொருள் தயாரிக்கப்படுகிறது.
(4) நைட்ரஜன் நீரில் சிறிதளவே கரையும்

136. தவறான இணையைத் தேர்ந்தெடு.
(1) சக்கர் - கிரைசாந்திமம் (2) ஓடு தண்டு - வெங்காயத் தாமரை
(3) ஃபில்லோடு - அகேஷியா ஆரிகுலிபார்மிஸ் (4) கந்தம் - சேனைக் கிழங்கு

137. கீழ்க்கண்டவற்றுள் முட்டு வேர்கள் எவற்றில் காணப்படுகின்றன?
(1) ஆலமரம் (2) கரும்பு (3) மக்காச் சோளம் (4) 2 மற்றும் 3

138. பொருத்துக.
(i) கிணற்றடிப் பூண்டு - a. அயல் மகரந்தச் சேர்க்கை
(ii) ஸ்ட்ராஃபெர்ரி - b. மஞ்சரி
(iii) ஸ்பைரோகைரா - c. ஸ்போர் உருவாதல்
(iv) டெரிடோஃபைட் - d. துண்டாதல்
(1) i - b ii - a iii - c iv - d (2) i - d ii - a iii - b iv - c
(3) i - d ii - b iii - a iv - c (4) i - b ii - a iii - d iv - c

139. செல் பகுப்பின்போது ஸ்பிண்டில் நார்களைப் பெருக்கமடையச் செய்யும் உறுப்பு எது?
(1) உட்கரு (2) ரிபோசோம் (3) சென்ட்ரியோல் (4) மைட்டோகாண்ட்ரியா

140. ஒப்புமைப்படுத்துக. தாவர செல் : பசுங்கணிகம் :: விலங்கு செல் : ?
(1) சென்ட்ரியோல் (2) ரிபோசோம் (3) கோல்கை உறுப்புகள் (4) விலங்குகள்

141. பின்வருவனவற்றுள் எவற்றுள் மைட்டோகாண்ட்ரியா, கோல்கை உடலம், எண்டோபிளாச வலைப்பின்னல் காணப்படுவதில்லை?
(1) பூஞ்சை (2) புரோட்டோசோவா (3) ஆல்கா (4) பாக்டீரியா

142. பொருத்துக.
(i) மெத்தனோஜென்கள் - a. எ.கோலை
(ii) வைட்டமின் K - b. லினென் நூல் இழைகள்
(iii) சூடோமோனாஸ் ஏருஜினோஸா - c. நைட்ரஜன் நிலைநிறுத்தம்
(iv) சயனோ பாக்டீரியா - d. உயிரி வாயு உற்பத்தி
(1) i - b ii - d iii - a iv - c (2) i - d ii - a iii - b iv - c
(3) i - d ii - b iii - a iv - c (4) i - b ii - c iii - d iv - a

143. பின்வருவனவற்றுள் எது தவறான கூற்று?
(1) பூஞ்சைகளின் சேமிப்புப் பொருள் கிளைகோஜென் மற்றும் எண்ணெய் ஆகும்.
(2) அகார் அகார் ஆய்வகங்களில் வளர்ப்பு ஊடகங்களில் பயன்படுகிறது
(3) பிரையோஃபைட்டுகளில் தெளிவான சந்ததி மாற்றம் காணப்படுகிறது.
(4) டெரிடோஃபைட்டுகளில் கேமிட்டோஃபைட் சந்ததி ஓங்கு தன்மை கொண்டது

144. இருசொல் பெயரிடும் முறையை நடைமுறைப்படுத்தியவர் ________.
(1) லின்னேயஸ் (2) பெந்தம் - ஹூக்கர்
(3) அகஸ்டின் பைரமிஸ் டி கேண்டோல் (4) காஸ்பர்டு பாஹின்

145. காற்றில்லா சுவாசத்தின்பொழுது கிடைக்கும் விளைபொருள் ________.
(1) எத்தனால், ஆக்சிஜன்
(2) கார்பன் டை ஆக்ஸைடு, நீர்
(3) எத்தனால் அல்லது லாக்டிக் அமிலம், கார்பன் டை ஆக்ஸைடு
(4) லாக்டிக் அமிலம், நைட்ரஜன்

## சமூக அறிவியல்

146. பொது ஆண்டு 1522 -ல் விஜயநகருக்கு வருகை புரிந்த போர்ச்சுகீசிய பயணி யார்?
(1) டோமிங்கோ பயஸ் (2) இபின் பதூதா (3) மெகஸ்தனிஸ் (4) நிக்கோலோ கோண்டி

147. டெல்லியின் முதல் சுல்தான் என்று தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டவர் ________.
(1) பாபர் (2) அலாவுதீன் கில்ஜி (3) பிரோஷா துக்ளக் (4) குத்புதீன் ஐபக்

148. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.
(1) சூரியனார் கோவில் -கோனார்க் (2) தில்வாரா சமண கோவில் - அபு குன்று
(3) காந்தர்யா கோவில் - உத்திர பிரதேசம் (4) கஜுராஹோ கோவில் -பந்தல்கண்ட்

149. வேள்விக்குடி செப்பேடுகளின் கொடையாளி என அழைக்கப்படுபவர் ________.
(1) சுந்தரபாண்டியன் (2) ஜடில பராந்தக நெடுஞ்சடையன் (3) வீரபாண்டியன் (4) ராஜராஜ சோழன்

150. பொருத்துக.
(i) அடிமை வம்சம் - a. பிரோஷ் ஷா (ii) கில்ஜி வம்சம் - b. இப்ராஹிம்
(iii) துக்ளக் வம்சம் - c. அலாவுதீன் (iv) லோடி வம்சம் - d. பால்பன்
(1) i - d ii - c iii - a iv - b (2) i - c ii - d iii - a iv - b
(3) i - b ii - a iii - d iv - c (4) i - b ii - a iii - c iv - d

151. தவறான இணையைத் தேர்வு செய்க
(1) குத்புதீன் ஐபக் - அலாவுதீன் (2) இல்துமிஷ் - ருக்குதீன் பிரோஷ்
(3) பால்பன் - கைகுபாத் (4) பகலூல் லோடி - சிக்கந்தர் லோடி

152. பொருத்துக.
(i) தஞ்சை பெரிய கோவில் - a. தேர் வடிவம்
(ii) கங்கை கொண்ட சோழபுரம் - b. 7 மீட்டர்
(iii) தாராசுரம் - c. 55 மீட்டர்
(iv) ராமநாத சுவாமி கோவில் வெளிப்பிரகாரம் - d. 216 அடிகள்
(1) i - d ii - a iii - c iv - b (2) i - d ii - c iii - a iv - b
(3) i - b ii - a iii - d iv - c (4) i - b ii - a iii - c iv - d

153. சரியான இணையைத் தேர்ந்தெடு
1. பிற்கால சோழர்கள் - தாராசுரம் 2. காஞ்சிபுரம் - ஜலகண்டேஸ்வரர் கோவில்
3. மதுரை - ஆதிநாதர் கோவில் 4. திருநெல்வேலி - வரதராஜ பெருமாள் கோவில்
(1) 3, 4 மட்டும் (2) 2 மட்டும் (3) 1 மட்டும் (4) 2, 4 மட்டும்

154. புக்கர் பரிசு வென்ற முதல் இந்திய பெண் ______.
(1) சுஷ்மா சுவராஜ் (2) அருந்ததிராய் (3) கிரண்பேடி (4) விஜயலட்சுமி பண்டிட்

155. பொருத்துக.
(i) புனித ஜார்ஜ் கோட்டை- a. பழவேற்காடு (ii) புனித பிரான்சிஸ் ஆலயம் - b. கல்கத்தா
(iii) புனித வில்லியம் கோட்டை- c. சென்னை (iv) கெல்டிரியா கோட்டை- d. கொச்சின்
(1) i - c ii - d iii - b iv - a (2) i - c ii - d iii - a iv - b
(3) i - b ii - a iii - d iv - c (4) i - b ii - a iii - c iv - d

156. கூற்றுகளை ஆராய்க
கூற்று 1 : மூன்று கர்நாடக போர்கள் பிரெஞ்சுக்காரர்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் இடையே நடைபெற்றது.
கூற்று 2 : கர்நாடகப் போர்கள் பிரான்சை நலிவடையச் செய்தன.
(1) கூற்று 1 சரி கூற்று 2 தவறு (2) கூற்று 1 மற்றும் கூற்று 2 தவறு
(3) கூற்று 1 தவறு கூற்று 2 சரி (4) கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி

157. இந்திய ஆட்சிப் பணி சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு _________.
(1) 1862 (2) 1861 (3) 1859 (4) 1857

158. கேசப் சந்திர ராய் என்பவர் தலைமையில் நடைபெற்ற கலகம் எது?
(1) பாப்னா கலகம் (2) மாப்ளா கலகம் (3) தக்காண கலகம் (4) இண்டிகோ கலகம்

159. கூற்றுகளை ஆராய்க
கூற்று 1 : இந்தியாவின் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் மூன்றாவது முக்கியத் தூணாக ராணுவம் விளங்கியது.
கூற்று 2 : கிழக்கிந்திய கம்பெனி தன் ராணுவத்திற்கு ஆட்களை சேர்த்து சிப்பாய் ராணுவம் என பெயரிட்டது.
(1) கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி (2) கூற்று 1 சரி கூற்று 2 தவறு
(3) கூற்று 1 தவறு கூற்று 2 சரி (4) கூற்று 1 மற்றும் கூற்று 2 தவறு

160. பின்வருவனவற்றை வரிசைப்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
(a) கர்நாடக உடன்படிக்கை (b) விக்டோரியா பேரறிக்கை
(c) வேலூர் கலகம் (d) சுதந்திரப் பிரகடனம்
(1) a, b, c, d (2) a, d, c, b (3) a, c, d, b (4) a, b, c, d

161. பொருத்துக.
(i) நாத்திகம் - a. சிக்கந்தரா
(ii) செகுலம் - b. கடவுள் நம்பிக்கையற்று இருத்தல்
(iii) அக்பரின் கல்லறை - c. மதசார்பற்ற நாடு
(iv) இந்தியா - d. காலம்
(1) i - d ii - a iii - c iv - b (2) i - c ii - d iii - a iv - b
(3) i - c ii - a iii - b iv - d (4) i - b ii - d iii - a iv - c

162. சரியான இணையைத் தேர்வு செய்க
(1) இந்து - குவிமாடம் (2) சமணம் - கோபுரம் (3) புத்தம் - ஸ்தூபி (4) இஸ்லாம் - விதானம்

163. தவறான கூற்று எது?
(1) புவிக்கோளம் மூன்று செறிந்த அடுக்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது
(2) புவிக் கருவம் இரண்டு அடுக்குகளைக் கொண்டது
(3) புவிக் கருவம் பேரிஸ்பியர் என்று அழைக்கப்படுகிறது.
(4) புவி வெளிப்புற அடுக்கின் சராசரி பருமன் 10 முதல் 30 கிலோ மீட்டர்வரை பரவியுள்ளது

164. கூற்று : நில நடுக்கம் புவி பரப்பில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துகிறது.
காரணம் : புவியின் மேலோட்டில், ஒரு பகுதியில் ஏற்படும் திடீர் நகர்வானது, நிலத்தை அதிரவைக்கும் அசைவையும், நடுக்கத்தையும் ஏற்படுத்துவதை நிலநடுக்கம் என்கிறோம்.
(1) கூற்று காரணம் இரண்டும் சரி (2) கூற்று சரி காரணம் தவறு
(3) கூற்று தவறு காரணம் சரி (4) கூற்று காரணம் இரண்டும் தவறு

165. பொருத்துக.
(i) ஆசியா மைனர் - a. சிலிகா ஏரி (ii) காயல்கள் - b. ஜெர்மனி
(iii) ஒடிசா - c. உப்பங்கழிகள் (iv) சர்க்குகள் - d. துருக்கி
(1) i - d ii - c iii - a iv - b (2) i - d ii - a iii - c iv - b
(3) i - b ii - d iii - a iv - c (4) i - b ii - a iii - c iv - d

166. உலகில் மிகப் பழமையான படிவுப் பாறைகள் எந்த நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது?
(1) இத்தாலி (2) இந்தியா (3) கிரீன்லாந்து (4) ஜப்பான்

167. பின்வருவனவற்றுள் தவறான கூற்று எது?
(1) தீப்பாறைகள் கடினத்தன்மை உடையவை
(2) தீப்பாறைகள் கட்டுமான வேலைகளுக்கு பயன்படாது
(3) தீப்பாறைகள் நீர் புகாத்தன்மை கொண்டவை (4) தீப்பாறைகள் இரண்டு வகைப்படும்

168. துருக்கல் மண் என்பது ________.
(1) பாலை மண் (2) மலை மண் (3) சரளை மண் (4) கரிசல் மண்

169. “கிளைமோ” என்பதன் தமிழாக்கம் ________.
(1) காலநிலை (2) நேர்கோணம் (3) வானிலை (4) சாய்வுக் கோணம்

170. காற்றில் தொங்கும் நிலையில் மிதக்கும் நுண்ணிய நீர் துளிகள் ________.
(1) மூடுபனி (2) அடர் மூடுபனி (3) உறைபனி (4) பனி

171. 2050 இல் உலகின் மக்கள் தொகையில் நகர மக்கள் தொகை எத்தனை சதவீதம் உயரும் என கணிக்கப்பட்டுள்ளது?
(1) 68 (2) 60 (3) 80 (4) 75

172. உலக கலாச்சார பன்முகத்தன்மை தினம் ________.
(1) மே 23 (2) ஜூன் 12 (3) டிசம்பர் 10 (4) மே 21

173. சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாடு பின்பற்றப்படும் நாடுகள் எவை?
(1) சீனா, வடகொரியா (2) வடகொரியா, இங்கிலாந்து
(3) சீனா, இந்தியா (4) இந்தியா, இங்கிலாந்து

174. ஒரு கட்சி மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட, சட்டப்பேரவைத் தேர்தலில் குறைந்தபட்சம் எத்தனை சதவீத வாக்குகளைப் பெற்று இருத்தல் வேண்டும்?
(1) 3% (2) 6% (3) 5% (4) 4%

175. செல்வத்தை உற்பத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட செல்வம் ________.
(1) மூலதனம் (2) உழைப்பு (3) நிலம் (4) உற்பத்தி

176. அரசியலமைப்பு சட்டப்படி ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை ______ இக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
(1) 234 (2) 250 (3) 500 (4) 545

177. தவறான இணையைத் தேர்வு செய்க
(1) சட்டமன்றப் பேரவை - கீழவை (2) சட்டமன்ற மேலவை - மேலவை
(3) ஆளுநர் - மாநில அரசின் தலைவர் (4) முதலமைச்சர் - எதிர்க்கட்சித் தலைவர்

178. கூற்றுகளை ஆராய்க
கூற்று 1 : ஒருவர் தனது நாட்டு உரிமையை மாற்ற முடியும்.
கூற்று 2 : ஒருவர் தனது குடியுரிமையை மாற்ற முடியாது.
(1) கூற்று 1 மற்றும் கூற்று 2 சரி (2) கூற்று 1 சரி கூற்று 2 தவறு
(3) கூற்று 1 தவறு கூற்று 2 சரி (4) கூற்று 1 மற்றும் கூற்று 2 தவறு

179. விலைகள் உயர்ந்து பணத்தின் மதிப்பு வீழ்ச்சியடைவது _______ ஆகும்.
(1) பணவீக்கம் (2) பணவாட்டம் (3) நெகிழிப் பணம் (4) கருப்புப் பணம்

180. சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு.
(i) எதையெல்லாம் செய்ய வல்லதோ அதுவே பணம் - வாக்கர்
(ii) பணம் என்பது கடினமான கருத்து அல்ல - ஸ்டோவ்ஸ்கி
(iii) தமிழ்நாட்டை சேர்ந்த உதயகுமார் என்பவரால் இந்திய ரூபாயின் குறியீடு வடிவமைக்கப்பட்டது
(1) (i) மற்றும் (ii) (2) (i) மற்றும் (iii) (3) கூற்று (ii) மட்டும் (4) அனைத்தும்